**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி. R. சுஜாதா, B.Sc., L.L.M.,

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2024 ம் ஆண்டு நவம்பர் 16 ஆம் நாள் சனிக்கிழமை

**அசல் வழக்கு எண். 224/2019**

பொள்ளாச்சி டவுன், கல்யாண்ஜி மில் ரோடு, கதவு எண். 2 ல் வசிக்கும் சுமார் 55 வயதுள்ள மாரிமுத்து மனைவி ஈஸ்வரி

... வாதி

/ எதிர் /

1. பொள்ளாச்சி கடைவீதி, 169 , ஸ்ரீ கணேஷ் சித்தா நாட்டு மருந்துக்கடை, சுமார் 54 வயதுள்ள திருமூர்த்தி மகன் கோபால்

2. நகரமன்ற ஆணையாளர், பொள்ளாச்சி நகராட்சி, பொள்ளாச்சி.

... பிரதிவாதிகள்

வாதியானவர் தாவா "B" ஷெட்யூல் சொத்துகளில் அமையப்பெற்றுள்ள கிணறு மற்றும் அது அமைவிடம் ஆகியவற்றில் உள்ள தமது 1/2 பங்கு பொது பாத்தியதையை அனுபவித்திட யாதொரு இடையூறும் முதல் பிரதிவாதி புரிந்திடாதிருக்க வேண்டி ஒரு நிலையான உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட கோரியும் மற்றும் தாவா "B" ஷெட்யூல் சொத்துக்களில் முதல் பிரதிவாதியானவர் சட்டவிரோதமாக யாதொரு கட்டுமானப்பணியையும் செய்திடாதிருக்க வேண்டி ஒரு நிலையான உறுத்துக்கட்டளை பரிகாம் வழங்கிட கோரியும், தாவா "B" ஷெட்யூல் சொத்துக்களில் உள்ள சேந்து கிணறுவில் உள்ள கிணற்று நீரை இறைத்திடும் படிக்கு இருந்த அமைப்பினை சட்டவிரோதமாக பிரதிவாதியானவர் உடைத்து சேதப்படுத்தி அப்புறப்படுத்தியதை முன்பு போல சரி செய்து அமைத்துக்கொடுத்திட வேண்டி ஒரு செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா "B" ஷெட்யூல் சொத்துக்களில் முதல் பிரதிவாதியானவர் ஏற்கனவே சட்ட விரோதமாக ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பு கட்டுமானப்பணியை அப்புறப்படுத்திட ஆணையிட வேண்டி ஒரு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட கோரியும், தாவா "A" ஷெட்யூல் சொத்துக்களுக்கு மேற்புறத்தில் தென்வடலாக அமையப்பெற்றுள்ள சந்து வழியாகச் சென்று பொள்ளாச்சி சார் பதிவாளர் அலுவலக ஆவண எண். 1285/1951 பாக சாசனத்தில் பொது பாத்தியதையாகக் கண்டுள்ள சுவர் பூசிக் கொள்ளும் பாத்தியதையையும் ரிப்பேர் செய்து கொள்ளும் பாத்தியதையையும் வாதி அனுபவித்துக்கொள்வதற்கு இடையூறாக முதல் பிரதிவாதியால் படிக்கட்டு கட்டி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளவற்றை பிரதிவாதியானவர் அப்புறப்படுத்திட ஆணையிட வேண்டி வாதிக்கு ஆதரவாக ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட வேண்டுமாயும் மற்றும் தாவா செலவுத்தொகை கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் நாள் : 03.08.2019.

தாவா வியாஜ்ஜிய மூல நாள் 03.02.1947, 10.05.1951, 10.07.2001, 15.10.2010. 09.07.2019, 10.07.2019 மற்றும் 12.07.2019 ஆகிய தேதிகளில் பொள்ளாச்சி டவுனில் ஆரம்பம்.

தாவா பரிகாரத்தின் மதிப்பு ரூ.5,000/- மற்றும் இதற்குண்டான நீதிமன்றக் கட்டணம் ரூ.150/- ஐ தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைத்தீர்வைச் சட்டம் பிரிவு 27(c) ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

**மதிப்பீடு விவரம்**

| | | |
|---|---|---|
| (i)தாவா (a) பரிகாரத்தின் மதிப்பீடு | | |
| (PERMANENT INJUNCTION) | : Rs.1,000/- | |
| அதற்கான முத்திரைத் தீர்வை U/S.27(c) | | Rs.30/- |
| (ii)தாவா (b) பரிகாரத்தின் மதிப்பீடு | | |
| (PERMANENT INJUNCTION) | : Rs.1,000/- | |
| அதற்கான முத்திரைத் தீர்வை U/S.27(c) | | Rs.30/- |
| (iii)தாவா (c) பரிகாரத்தின் மதிப்பீடு | | |
| (MANDATORY INJUNCTION) | : Rs.1,000/- | |
| அதற்கான முத்திரைத் தீர்வை U/S.27(c) | | Rs.30/- |
| (iv)தாவா (d) பரிகாரத்தின் மதிப்பீடு | | |
| (MANDATORY INJUNCTION) | : Rs.1,000/- | |
| அதற்கான முத்திரைத் தீர்வை U/S.27(c) | | Rs.30/- |
| (v)தாவா (e) பரிகாரத்தின் மதிப்பீடு | | |
| (MANDATORY INJUNCTION) | : Rs.1,000/- | |
| அதற்கான முத்திரைத் தீர்வை U/S.27(c) | | Rs.30/- |
| மொத்த பரிகார மதிப்பு அதற்கான முத்திரை தீர்வை | Rs.5,000/- | Rs.150/- |

இந்த வழக்கானது என் முன்பாக இன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P.K. மயில்சாமி, அவர்கள் ஆஜராகியும், 1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. N. சுந்தரராஜ் அவர்கள் ஆஜராகியும் , 2 வது பிரதிவாதி தரப்பில் நகர மன்ற ஆணைர் திரு. T. மருதராஜ் அவர்கள் ஆஜராகியும், வாதி அழைத்தும் ஆஜரின்மையினாலும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்: தீர்ப்பாணை

1. வாதியின் வருகையின்மை காரணமாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது

2. செலவுத்தொகை இல்லை.

<u>MEMO OF COST LIST</u>

(Both side cost list not filed )

<u>சொத்து விபரம்</u>

<u>"A" ஷெட்யூல் சொத்து</u>

திருப்பூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார்பதிவு வட்டம், பொள்ளாச்சி வட்டம், பொள்ளாச்சி நகரில் டவுன் சர்வே வார்டு 3 ல், முன்பு சொக்கநாதபுரம் வீதி என்றிருந்து தற்காலம் சுபரமணிய சுவாமி கோயில் வீதி என்று பெயர் மாறியுள்ள வீதியில் கிழமேல் சுப்ரமணிய சுவாமி கோயில் வீதிக்கும் தெற்கு, கிழமேல் வீதிக்கும் வடக்கு, ரங்கசாமி நாயக்கர், தாயம்மாள் ஆகியோர் வீட்டுக்கும் கிழக்கு, சின்னம்மாள், தேவராஜ் ஆகியோர் சொத்துக்களுக்கும் மேற்கு, இதன் மத்தியிலுள்ள இடம் வில்லைக் கட்டிடம் வகையரா சொத்துக்களில் கிழபுரம் தென்வடலாக அதாவது சுப்ரமணிய சுவாமி கோயில் வீதிக்கும் தெற்கு, கிழமேல் வீதிக்கும் வடக்கு, ராசாக் கவுண்டர் வகையரா சொத்துக்கும் கிழக்கு, சின்னம்மாள் கிறைய சொத்துக்கும் மேற்கு. இதன் மத்தியில் உள்ள வடபுறம் கிழமேலடி 25 1/4 தென்புறம் கிழமேலடி 22 கிழபுரம் தென்வடலடி 111, மேல்புரம் தென்வடலடி வடக்கேயிருந்து தெற்கே 35 3/4 அடி வந்து பின் நேர் மேற்கே 2 1/2 அடி போய் பின் நேர் தெற்கே 38 அடி வந்து பின் நேர் கிழக்கே 3 அடி போய் பின் நேர் தெற்கே 29 1/2 அடி இந்த அளவுள்ள 2789 சதுரடி விஸ்தீரணமுள்ள இடமும், இதிலுள்ள சகலமான கட்டிடங்கள் வகையராச் சொத்துக்களில் தென்புற ஓர்பாகச் சொத்துக்கு எல்லைகள் அதாவது மாணிக்கம் சொத்துக்கும் தெற்கு, கிழமேல் வீதிக்கும் வடக்கு, ராசாக் கவுண்டர் வகையரா சொத்துக்கும் கிழக்கு சின்னம்மாளுக்கும் தேவராஜுக்கும் பாத்தியமான சொத்துக்கும் மேற்கு, இதன் மத்தியில் உள்ள வடபுரம் கிழமேலடி 28, தென்புரம் கிழமேலடி 22, கிழபுரம் தென்வடலடி 58 1/4 மேல்புரம் தென்வடலடி வடக்கே இருந்து தெற்கே 21 1/2 அடி வந்து பின் நேர் கிழக்கே 3 அடி போய் பின் நேர் தெற்கே 29 1/2 அடி இந்த அளவுள்ள 1321 1/4 சதுரடி விஸ்தீரணமுள்ள இடமும் இதில் வடக்கு தெற்கு வாசல்கள் வைத்துக் கட்டியுள்ள வில்லை வீடும் இதிலுள்ள சகலமான ரூம்களும் கதவு நிலவு கட்டுக் கோப்பு முன் வாசல் மேற்படி வீட்டிலுள்ள மின் விளக்குகளும் அதன் மின் இணைப்பும் தண்ணீர் குழாய் இணைப்பும் அதன் காப்புத் தொகையும் ராசாக் கவுண்டர் பாகத்திலுள்ள சேந்து கிணற்றில் சரிபாதியும் மேற்படி சேந்து கிணற்றுக்கு தென்வடல் சுவற்றில் வைத்திருக்கும் நடை வழியாக வந்து மேற்படி

கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டு போகும் பாத்தியமும் கக்கூஸ் பாத்ரூமும் மற்றும் 1285/1951 நெ. பாக்க சாசனத்தில் கண்ட சகல பாத்தியங்களும் சகிதம். இந்த சொத்துக்கு வடபுரமும் மாணிக்கம் சொத்தின் 2 -வது அயிட்ட சொத்தின் தென்புரமும் மத்தியில் உள்ள கிழமேல் வீட்டு சுவரும் சகிதம்.

மேற்படி சொத்து டவுன் சர்வே வார்டு 3, டவுன் சர்வே எண். உட்பிரிவுப்படி 269/ 2 B, பூராவும் 48 சதுரடியிலும் டவுன் சர்வே எண்.

263/2 பூராவும் 2605 சதுரடியும் டவுன் சர்வே எண். 264 ல் ஓர் பாகம் மேல் கோட்டில் 136 சதுரடியிலுமாக உள்ளது

கதவு எண் பழையது 99, புதியது 2

வரிவிதிப்பு எண்.பழையது 11901/221 புதியது 22250

முனிசிபல் வார்டு 19

மின் இணைப்பு எண் 386-009 -37

தண்ணீர் குழாய் இணைப்பு எண் 7297

ஷை சொத்து புதிய சர்வேப்படி டவுன் சர்வே வார்டு C பிளாக் 7, T.S.No.263/2A2, T.S.No. 263/2 B, T.S.No.264/1 ல் ஆகிய சர்வே எண்களுக்கு கட்டுப்பட்டது.

**"B" ஷெட்யூல் சொத்து**

கோவை ரிடிடு, பொள்ளாச்சி சப்ரி , பொள்ளாச்சி டவுன் சர்வே வார்டு , 3, கல்யாண்ஜி மில் வீதி, கதவு எண் 2 ல் புல எண்.263/1 ஏ இல் உள்ள கிணறு மற்றும் அதன் அமைவிடம் அதன் விஸ்தீரணம் 0.0019.0 இதன் மனை வரிப்பட்டா எண்.28 இதன் அளவு.

| | |
|---|---|
| கிழமேல் வடபுறம் | ... 7.9 மீ |
| தென்புறம் | ...7.9 மீ |
| தென்வடல் கிழபுறம் | ... 3.2 மீ |
| மேற்புறம் | ... 1.6 மீ |

இந்த அளவுள்ள காலியிடம் அதில் அமையப் பெற்றுள்ள கிணறு மட்டும்.

2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 13 ம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/- ( R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

------------------------------------------------------------------------------

**<u>தீர்ப்பாணை</u>**

அ.வ.எண். 224/2019

நாள். 16.11.2024.

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

------------------------------------------------------------------------------